## கலை பண்பாட்டுத்துறை வழங்கும்
# ‘சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’

## செய்திக் குறிப்பு

2022-2023 ஆம் நிதியாண்டில் சென்னை மாநகரத்தில் தமிழர் திருநாளான பொங்கல் விழாவினையொட்டி 4 நாட்கள், 18 இடங்களில் நடைபெற்ற ‘சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’ அனைத்து தரப்பு மக்களின் வரவேற்பினை பெற்றதால், 2023-2024 ஆம் நிதியாண்டில் நிதிநிலை அறிக்கையின் போது சங்கமம் கலை விழா சென்னை மற்றும் எட்டு முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

நாட்டுப்புறக் கலைகளையும், கலைஞர்களையும் பேணி வளர்ப்பதற்கும், தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டாடுவதற்கும், கலைஞர்களுக்கு நல்வாய்ப்புகளை ஏற்படுத்தவும் ‘சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’ என்ற பெயரில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் நாட்டுப்புறக் கலை விழாக்கள் அக்டோபர்-டிசம்பர்-2023-ல் முதற்கட்டமாக நடத்தப்படும். இக்கலைவிழாவின் வாயிலாக சுமார் 3000 நாட்டுப்புறக் கலைஞர்கள் பயன்பெறுவர். அதனைத் தொடர்ந்து சென்னையில், ஜனவரி-2024 பொங்கல் பண்டிகையின் போது தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகள், அயல் மாநில நாட்டுப்புறக் கலைகள், செவ்வியல் கலைகள் இடம் பெறும் வகையில் பிரம்மாண்ட சங்கமம்-நம்ம ஊரு திருவிழா பல்வேறு இடங்களில் தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத்துறையால் நடத்தப்படவுள்ளது. இக்கலைவிழாவின் வாயிலாக 2000-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பயன்பெறுவர்.

‘சங்கமம்-நம்ம ஊரு திருவிழா’வில் பங்கு பெற விரும்பும் கலைக் குழுக்கள் தங்கள் கலைத்திறமையை வெளிப்படுத்தும் வகையில் 5 நிமிட வீடியோவினை குறுந்தகடு (CD) அல்லது பென் டிரைவ் (Pen Drive)-ல் பதிவு செய்து, அத்துடன் கலை பண்பாட்டுத்துறையின் இணையதளத்தில் (**www.artandculture.tn.gov.in**) வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, விண்ணப்பத்தில் கோரியுள்ள விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்து, தொடர்புடைய கலை பண்பாட்டுத்துறையின் மண்டல கலை

பண்பாட்டு மைய அலுவலகங்களுக்கு பதிவுத் தபாலில் (Registered Post) அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கலை பண்பாட்டுத்துறையால் அமைக்கப்படும் தேர்வுக்குழுவால் தகுதியான கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, 'நம்ம ஊரு திருவிழா'வின் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்புகள் அளிக்கப்படும்.

கலைக்குழுக்கள் பின்வரும் விதிமுறைகளை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

1. தங்கள் குழுவின் கலைத்திறமையை வெளிப்படுத்தும் 5 நிமிட வீடியோவை குறுந்தகடு (CD) அல்லது பென் டிரைவ் (Pen Drive)-ல் பதிவு செய்து, அத்துடன் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து தொடர்புடைய கலை பண்பாட்டுத்துறையின் மண்டல உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு 06.10.2023-க்குள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டும்.
2. ஒரு குழுவில் இடம் பெற்ற கலைஞர்கள் வேறு எந்த குழுவிலும் பங்கேற்கக்கூடாது.
3. தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விவரம்

| வ.எண் | இடம் | மாவட்டங்கள் | முகவரி தொடர்பு எண் |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி, திருப்பூர் | உதவி இயக்குநர்<br>மண்டலக் கலை பண்பாட்டு மையம்,<br>தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி வளாகம், செட்டிபாளையம் பிரிவு ரோடு, மலுமிச்சம்பட்டி அஞ்சல்,<br>கோயம்புத்தூர் - 640150,<br>தொலைபேசி : **0422 - 2610290**,<br>மின் அஞ்சல் : adarts.tncbe@gmail.com. |
| 2 | தஞ்சாவூர் | தஞ்சாவூர், நாகப்பட்டிணம், திருவாரூர், கடலூர், கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, விழுப்புரம் | உதவி இயக்குநர்<br>மண்டலக் கலை பண்பாட்டு மையம்,<br>மண்டல கயிறு வாரியம் அலுவலகம் அருகில், வல்லம் சாலை,<br>பிள்ளையார்பட்டி அஞ்சல்,<br>தஞ்சாவூர் - 613403,<br>தொலைபேசி : **04362 - 232252**,<br>மின் அஞ்சல்: radactnj11@gmail.com |
| 3 | வேலூர் | வேலூர், இராணிப்பேட்டை, | உதவி இயக்குநர்,<br>மண்டலக் கலை பண்பாட்டு மையம்<br>சதாவரம், கோட்டை காவல் (கிராமம்), |

| வ.எண் | இடம் | மாவட்டங்கள் | முகவரி தொடர்பு எண் |
|---|---|---|---|
| | | திருப்பத்தூர், திருவண்ணாமலை | சின்ன காஞ்சிபுரம், ஓரிக்கை (அஞ்சல்), காஞ்சிபுரம் - 631502. தொலைபேசி : **044 - 27269148**. மின் அஞ்சல் : adartskpm@gmail.com |
| 4 | சேலம் | சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல் | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், தளவாய்பட்டி-திருப்பதி கவுண்டனூர் சாலை, அய்யம்பெருமாம்பட்டி (அஞ்சல்), சேலம் - 636302. தொலைபேசி : **0427 - 2386197**, மின் அஞ்சல் : adarts.tnslm@gmail.com. |
| 5 | திருநெல்வேலி | திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், 870/21 அரசு அலுவலர் ஆ குடியிருப்பு, திருநெல்வேலி - 627007. தொலைபேசி : **0462 - 2553890**, மின் அஞ்சல் : racctnu@gmail.com |
| 6 | காஞ்சிபுரம் | சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, | உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம் சதாவரம், கோட்டை காவல் (கிராமம்), சின்ன காஞ்சிபுரம், ஓரிக்கை (அஞ்சல்), காஞ்சிபுரம் - 631502. தொலைபேசி : **044 - 27269148**. மின் அஞ்சல் : adartskpm@gmail.com |
| 7 | மதுரை | மதுரை, திண்டுக்கல், தேனி, ராமநாதபுரம், சிவகங்கை | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், பாரதி உலா முதல் தெரு, தல்லாகுளம், மதுரை - 625002, தொலைபேசி : **0452 - 2566420**, மின் அஞ்சல் : artadmdu@gmail.com |
| 8 | திருச்சிராபள்ளி | திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கரூர், அரியலூர், பெரம்பலூர் | உதவி இயக்குநர் மண்டலக் கலை பண்பாட்டு மையம், எண் 32, நைட்சாயில் டெப்போ சாலை, மூலத்தோப்பு, மேலூர் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி - 620006. தொலைபேசி :**0431 - 2434122**, மின் அஞ்சல் : artandculturetryrgn2014@gmail.com |